# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066929

1. District : திருவள்ளூர் — மாவட்டம்
   PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு — காவல்நிலையம்
   Year: ஆண்டு
   FIR No.: 5/AC/2019/TLR — மு.த.அ. எண்
   Date: 17/10/2019 — நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தப்பட்டது 2018) — Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 16/10/2019
   Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17/10/2019
   Time : நேரம் 15.30 மணிக்கு
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 17/10/2019
   Time : நேரம் 16.00 மணிக்கு

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — வடகிழக்கு சுமார் 51 கி.மீ
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி — [illegible] வட்டார வளர்ச்சி அலுவலகம் மீஞ்சூர் திருவள்ளூர் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திரு. D. தங்கராமன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — த/பெ தேவசிங்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 62/19
   (d) Nationality : நாட்டினம் — Indian
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் — ஓய்வுபெற்ற ஆசிரியர்
   (g) Address : முகவரி — எண்: 142, சுப்பிரமணிய நகர், 4வது குறுக்கு தெரு, திருவொற்றியூர், சென்னை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி. பிரசன்னா,
   A3 உதவியாளர்,
   வட்டார வளர்ச்சி அலுவலகம்
   மீஞ்சூர் திருவள்ளூர் மாவட்டம்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

GCP-240-24(Type-2) 90,000 Cps.-2T 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

- NIL -

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு - NIL -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் - NIL -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

separate sheet attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed V. Ganesan Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

D. Nanasivam 17/10/19.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 17/10/2019.
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 18/10/2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் V. Ganesan.
Rank: நிலை ......................No. எண் ........
Inspector of Police,
V & AC Thiruvall[illegible]

(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.5/AC/2019/TLR, U/s 7 of Prevention of Corruption Act - 1988(Amendment Act 2018).

பணிந்து அனுப்பப்பட்டது.

கடந்த 17.10.2019-ம் தேதி சுமார் மாலை 15.30 மணியளவில், நான் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது. சென்னை திருவெற்றியூர் 4வது குறுக்கு தெரு சுப்ரமணிய நகரில் எண்.142 என்ற முகவரியில் வசித்து வரும் திரு.நமச்சிவாயம், த பெ தேவர்சிங் என்பவர் ஆஜராகி கடந்த 17.10.2019-ந் தேதியிட்டு அவர் கையால் எழுதி என்னிடம் கொடுத்த புகாரின் விவரம் வருமாறு. அனுப்புநர். D.நமச்சிவாயம், த பெ.தேவர்சிங், எண் 142, சுப்ரமணிய நகர், 4வது குறுக்கு தெரு. திருவொற்றியூர். சென்னை. பெறுநர். காவல் ஆய்வாளர். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு. திருவள்ளூர் மாவட்டம். அய்யா. நான் மேற்கண்ட முகவரியில் எனது மனைவி மற்றும் மகளுடன் வசித்து வருகிறேன். நான் தபால் துறையில் தபால்காரராக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். எனது மகள் +2 படித்து வருகிறாள். நான் கடந்த 2009 ஆம் ஆண்டு அத்திபட்டு ருக்மணி நகரில் அமைந்துள்ள மணைப்பிரிவில் பிளாட் எண்.46-ல் 1200 சதுர அடிகள் ஏற்கனவே விற்றது போக மீதியுள்ள 1200 சதுர அடி கொண்ட மணையினை திரு.மோகன், த பெ.முனுசாமி என்ற பவர் ஏஜெண்டிடம் இருந்து கிரையமாக பெற்றேன். அது திருவொற்றியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 864/2009 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் வீடு கட்ட வேண்டி எனக்கு தெரிந்த வரைவாளர் திரு.கீர்த்திவாசன் என்பவர் மூலமாக கட்டிடம் கட்ட அனுமதி பெற்றுத்தருமாறு கூறியிருந்தேன். இது சம்மந்தமாக அவர் கடந்த 30.08.2019 அன்று மீஞ்சூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் மனு செய்திருப்பதாகவும். அவர் தொடர் வேலைபளுவின் காரணமாக கவனிக்கமுடியவில்லை என்றும் இது சம்மந்தமாக என்னையே மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் உள்ள சம்மந்தப்பட்டவரை சந்தித்து கேட்குமாறு கூறியதின் பேரில் நான் மேற்படி அலுவலகத்திற்கு 15.10.2019 அன்று சுமார் 12.00 மணிக்கு சென்று அங்கு வந்து சென்றவர்களை விசாரித்தபோது. கட்டிட அனுமதி சம்மந்தமாக திருமதி.பிரசன்னா என்ற ஏ.3. உதவியாளர் கவனித்து வருவதாக கூறியதின் பேரில். நான் அவரது இருக்கை அருகே சென்று என்னை அறிமுகம் செய்துகொண்டு என்னுடைய கட்டிட அனுமதி குறித்து கேட்டபோது. சென்னை மாநகராட்சி பிளானர் திரு.வெங்டேசன் அவர்களிடம் உள்ளதாக தெரிவித்து. திரு.வெங்கடேசன் அவர்களுடைய அலைபேசி எண்ணையும் (9841391040) கொடுத்தார். நான் அன்றே திரு.வெங்கடேசன் அவர்களை தொடர்பு கொண்டு கேட்டபோது. அவர் கொளத்தூர் எஸ்.ஆர்.எம் ஓட்டல் அருகே உள்ள ஒரு கட்டிடத்திற்கு வரசொன்னதின்பேரில் நான் மாலை சுமார் 04.00 மணிக்கு அவர் சொன்ன இடத்திற்கு சென்று அவரை சந்தித்தபோது. அவர்

ஏற்கனவே கையொப்பமிட்டிருந்த எனது கோப்பினை தந்து மேற்படி அலு... ஒப்படைக்குமாறு கூறினார். எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் ... சென்றுவிட்டேன். மறுநாள் 16.10.2019 தேதி காலை சுமார் 12.00 மணிக்கு மீண்டும் வட்டார வளர்ச்சி அலுவலகம் சென்று திருமதி.பிரசன்னா அவர்களை சந்தித்து கோப்பினை கொடுத்தேன். அவர் அதனை பெற்றுக்கொண்டு காத்திருக்குமாறு கூறினார். பின்னர் சுமார் 03.30 மணிக்கு என்னை அழைத்து ஆங்கிலத்தில் இருந்த கடிதம் கொடுத்தார்கள். அதில் கருவூலத்தில் கட்டவேண்டிய தொகை ரூ.8,000/- என்றும் கேட்பு காசோலையாக ரூ.9,400/- செலுத்த வேண்டும் என்று கூறி அறிவுறுத்தல் கடிதத்தினையும் அரசு கருவூலத்தில் செலுத்த வேண்டிய தொகைக்கான செலுத்து படிவத்தில் ஒரு பத்தியை பூர்த்தி செய்து மீதமுள்ள மூன்று பத்தியை என்னையே பூர்த்தி செய்துகொள்ளுமாறு கூறி ஒரு கவரில் போட்டு என்னிடம் கொடுத்து மேற்படி பணத்தை செலுத்திவிட்டு அது சம்பந்தமான செலான் மற்றும் கேட்பு காசோலையை சமர்ப்பிக்கும்போது ரூ.5,000/-ஐ லஞ்சமாக தரவேண்டும் என்று கூறினார். நான் எனது குடும்ப சூழ்நிலையை சொல்லி எனது இயலாமையை கூறியபோது அவர் பக்கத்தில் இருந்த அறையினுள் சென்று வந்து என்னிடம் கொடுத்த கவரினை பெற்று அதில் பென்சிலால் 4500/- என்று எழுதி என்னிடம் கொடுத்து மேற்படி தொகையுடன் வந்தால் தான் அனுமதி கிடைக்கும் என்று கறாராக கூறி அனுப்பிவிட்டார். என்னிடம் போதிய பணம் இல்லாத காரணத்தால் திரும்பி சென்றுவிட்டேன். இன்று கடிதத்தில் குறிப்பிட்டவாறு மீண்டும் அரசு கருவூலத்தில் ரூ.8,000/- ஐ செலுத்தினேன். மீண்டும் இந்தியன் வங்கியில் தனித்தனியாக நான்கு கேட்பு காசோலையாக மொத்தம் ரூ.9,400/- ஐ பெற்றேன். எனக்கு மீண்டும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி.பிரசன்னா அவர்கள் கேட்ட ரூ.4,500/- லஞ்சமாக கொடுக்க விருப்பம் இல்லாததால் இப்புகார் மனுவை அளிக்கிறேன். எனவே அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் எடுக்கும் சட்ட நடவடிக்கைக்கு தக்க ஒத்துழைப்பு அளிக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம் D.நச்சிவாயம்) 17.10.2019. Honoured Sir, I received the above complaint on 17.10.2019 at 15.30 hrs and after getting proper permission from DVAC on this complaint, a Preliminary Enquiry was conducted in a discreet manner. Based on the outcome of the Preliminary Enquiry, enmity, genuineness of the complaint and the reputation of the accused are verfied. Since, there is prima-facie made out to register FIR on said complaint against the accused Tr.Prasanna, A3 Assistant, Block Development Office, Minjur, Thiruvallur District. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.5/AC/2019/TLR u/s 7 of The Prevention of Corruption Act-1988 (Amendment Act 2018) at about 16.00 hrs on today 17.10.2019 and took-up action.

INSPECTOR OF POLIC
VIGILANCE & ANTI CORRUPT
Thiruvallur - 602 001.